(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 376/2023 அ.சா.2

Name : **திரு.** பாலமுருகன்

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026.

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

என்னுடைய பெயர் பாலமுருகன் ஆகும். ஆனால் என்னுடைய பெயர் பாலு என்று சாட்சி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தற்போது வைரவம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 22.05.2022ம் தேதி மதியம் 01.00 மணி போல நான் எனது வீட்டில் இருந்தபோது எங்கள் ஊரைச் சேர்ந்த மாயழகன் மகன் செல்வம் எனக்கு போன் செய்து அவருக்கு பழக்கமான அம்பலகாரன் பட்டியைச் சேர்ந்த அழகு மகன் முருகன் செல்வத்திடம் உங்கள் ஊரைச் சேர்ந்த

மணிகண்டன் மகன் பெரியகருப்பன் கருங்காலக்குடி மொல்லமலை சோலைமலை வயலின் அருகே உள்ள ஆண்டிச்சாமி பாறையில் இறந்துகிடப்பதாக தகவல் சொன்னதாக சொல்லவும் நான் உடனே எனது சித்தப்பா மணிகண்டன் வீட்டிற்கு போய் எங்கள் சித்தப்பாவிடம் விவரத்தை சொல்லி உடனே நானும் எனது சித்தப்பாவும் ஆண்டிச்சாமி பாறைக்கு போய் பார்த்தபோது பெரியகருப்பன் உடம்பில் கன்றிய காயங்களுடன் மூக்கில் இரத்தம் வந்த நிலையில் தலை தெற்காகவும் கால்கள் வடக்கு நோக்கியும் மல்லாக்க இறந்து கிடந்தான் என்றும், நான் மேலூர் அரசு மருத்துவமனைக்கு போய் பெரியகருப்பன் பிரேதத்தை பார்த்துவிட்டு மேலூர் அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**</u>

**மறு விசாரணை – இல்லை.**

Sd/– பாலமுருகன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.13 19:18:01 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.